**இபலோகம பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஜூலை 02 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜூலை 12 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

இபலோகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்ற தண்டப்பண வருமான பதிவேட்டின் படி மீளாய்வாண்டில் வருமான மொத்தம் ரூபா 6,396,503 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுகளில் அது ரூபா 5,806,085 என காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். இனங்காண முடியாத சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்து மதிப்பீடு வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மாகாண இறைவரி திணைக்களத்தின் மூலம் தகவல்கள் பெற்றுக்கொண்டு ஆண்டிற்கான சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் . |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 374,362 தொகையான கழிவுப்பொருள் வரி | உரிய மீதிகளில் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு | 2017.12.331 இல் உள்ளவாறு கழிவுப்பொருள் |

| | | |
|---|---|---|
| வருமானம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கிளல் ஆரம்ப மீதி ரூபா 462,012 என எடுக்கப்பட்டிருந்தால் ரூபா 87,650 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | செய்யப்பட்டு சீராக்கப்பட வேண்டும். | பதிவேட்டில் பல நிறுவனங்களின் நிலுவைல கழிவு வரி மீதிஜக்ள முன்கொண்டு வரப்படாமையால் ரூபா 87,650 ஆன வேறுபாடு நிரூபணமானது. |

**(இ) கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 108,031,668 ஆகவுள்ள ஒரு கணக்கீட்டு விடயங்களுக்கு உரிய உரித்துப் பத்திரம் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது அதனை திருப்திகரமான விதத்தில் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 203 அதிகாரத்தின் 2(1) ஆம் பிரிவு | கல் ரோலர் மற்றும் டிராக்டர் டேலர் ஒன்று என்பன பதிவு செய்யப்படாமல் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. | விதிக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். கல் ரோலர் மற்றும் டிராக்டர் டேலர் ஒன்று என்பன இவ்வாண்டில் பதிவு செய்யப்படும். |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க | எரிபொருள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள் பரிசீலனை இவ்வாண்டு தொடக்கம் மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | சுற்றறிக்கை 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான தனித்தனி பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ்வாண்டு தொடக்கம் கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பாக தனித்தனி பதிவேடு ஒன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 5,544,143 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,119,587 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,307,700 | 1,582,937 | 1,241,763 | 803,187 | 1,450,800 | 1,333,457 | 1,137,300 | 374,362 |
| (ii) | வாடகை | 982,680 | 1,269,600 | 1,201,930 | 147,100 | 1,654,680 | 1,647,180 | 914,740 | 79,430 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,550,790 | 2,840,825 | 2,533,483 | 376,545 | 2,390,555 | 2,454,445 | 2,339,812 | 69,202 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,585,936 | 9,706,963 | 11,786,029 | 7,845,664 | 4,330,000 | 8,465,690 | 8,506,038 | 5,756,681 |
| | மொத்தம் | 10,427,106 | 15,400,325 | 16,763,205 | 9,172,496 | 9,826,035 | 13,900,772 | 12,897,890 | 6,279,675 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதி ஆகக் காணப்பட்ட மொத்த | நிலுவை வருமானம் அறவிடப்பட | ஏற்றுக் கொள்கின்றேன். 2019.05.31 இல் நிலுவை |

| | | |
|---|---|---|
| நிலுவை வருமானம் ரூபா 6,279,675 திசம்பர் 31 ஆம் திகதி ரூபா 9,172,496 ஆகக் காணப்பட்டது. | வேண்டும். | கழிவு வரி ரூபா 133,400 நிலுவை கடை கூலி ரூபா 60,360 நிலுவை முத்திரை கட்டணம் ரூபா 2,409,100 மற்றும் நிலுவை நீதிமன்ற தண்டப்படணம் ரூபா 2,361,733 அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.3 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக வெளியிடப்பட்டு வீதவரி விதிதப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னேற்ற மடைந்த பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக இனங்கண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டு வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் திசம்பர் 31 ஆம் திகதிக்கு 01 மாதம் தொடக்கம் 86 மாதங்கள் வரையான காலப்பகுதியில் 375 இடங்களில் ரூபா 803,187 பெறுமதியான குப்பை வரி வருமானம் கிடைக்க வேண்டியுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். நிலுவை குப்பை வரி வருமானத்தில் ரூபா 133,400.00 தொகை 2019.05.31 இல் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், நிலுவை பணத்தை அறவிடுவதற்கு இது வரை எழுத்து மூலம் உரிய நபர்கள் அறிவுறுத்தப்படவில்லை. |

**2.2.4 வேறு வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசம்பர் 31 ஆம் திகதிக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்படணம் ரூபா 4,175,464 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,670,200 ஆகும். | உரிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். உரிய நீதிமன்ற நிலுவை தண்டப்பணம் ரூபா 2,361,733.01 நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | | | 2,409,100 அறவிடப் பட்டுள்ளதுடன் எஞ்சிய பணம் இவ்வாண்டினுள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபையினால் செயற்படுத்தப்பட்ட 07 செயற்றிட்டங்களுக்காக ரூபா 16,618,915 தொகை கிடைக்க வேண்டியுள்ளது. | உரிய செயற்றிட்டங்கள் முடிவடைந்திருப் பின் பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். செயற்படுத்தப்பட்டிருந்த 16 செயற்றிட்டங்களுக்காக 2018.12.31 இல் பிரதேச சபைக்கு பணம் கிடைத்திருக்கவில்லை. |
| (இ) | சபையினால் செயற்படுத்தப்பட்ட 30 செயற்றிட்டங்களுக்காக ரூபா 14,855,432 தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது. | செயற்றிட்டங்கள் வெற்றிகரமாக முடிவடைந்திருப் பின் பொறுப்புக்காலம் முடிவடைந்திருப் பின் செலுத்த வேண்டிய பணம் தீர்க்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய பணம் 2018.12.31 ஆம் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 28 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப | இசெயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்தத் திட்டத்தை தயாரித்து சமர்க்கின்றேன். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.2.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 253,600 பெறுமதியான 06 இயந்திராதி உருப்படிகள் ஆவணங்களில் பதியப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை ஆவணப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | உரிய சொத்துக்கள் சரியாக நிலையான சொத்து பதிவேடுகளில் பதியப்பட்டு நிலையான சொத்துப் பதிவேடு சரியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.2.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி ரூபா 2,245,520 பெறுமதியான வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பல வருடங்களாக விளைவற்றுக் காணப்பட்டது. | சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வுக் குழுவொன்று தாபிக்கப்பட்டு அவற்றை பயன்படுத்த அல்லது அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரிய சொத்துக்கள் விளைவற்ற சொத்துக்கள் என்பதனால் எதிர் காலத்தில் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு கைதவிர்ப்புச் சபை ஒன்றின் மூலம் கைதவிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 4. கணக்களி பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்பட வேண்டும். | இவ்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |